இராசபாளையம் நகராட்சி ஆணையாளர்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராசபாளையம் நகராட்சி ஆணையாளர் 12-2-1972 அன்று இரவு நகர் விளக்குகளையும், தண்ணீர் வசதிகளையும் நிறுத்தியதாக அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(இ) இதுபற்றி ஏதாவது விசாரணை நடந்ததா?

(உ) ஆம் எனில் அதன் விபரம் என்ன

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) எந்தவித புகாரும் இது சம்பந்தமாக அரசுக்கு வரவில்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Orthopaedically Handicapped Students

* 38 *Q*.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of applications for the award of special scholarships in Colleges for orthopaedically handicapped students received during 1971-72; and

(*b*) the number and amount of such scholarships sanctioned?

உடல் ஊனமுற்ற மாணவர்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறப்புப் படிப்புதவித் தொகை வழங்குமாறு வேண்டி கல்லூரிகளில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களிடமிருந்து 1971-72-ல் வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது?

(இ) அவ்வாறு படிப்புதவித் தொகை வழங்கப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது? வழங்கப்பட்ட படிப்புதவித் தொகைகள் எவ்வளவு?

1972 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 133.

(இ) 42 மாணவர்கள் ரூ. 25,800. இது தவிர 1970-71-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971-72-ம் ஆண்டில் உபகாரச் சம்பளம் வேண்டி புதிப்பித்த 44 மாணவர்களுக்கு ரூ 30,500 உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. ஆக 86 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு ரூ. 56,300 வழங்கப்பட்டது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே. 133 பேர்கள் உடல் ஊனமுற்றவர்கள் இருந்தாலும், அதிலே 86 பேர்களுக்குத் தான் உபகாரச் சம்பளம் கிடைத்திருக்கிறது. மீதிப் பேர்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படி கிடைக்காததற்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உபகாரச் சம்பளம் வழங்கும்போது, உடல் ஊனத்தைப் பொறுத்து எடுத்துக் கொள்கிறார்களா அல்லது பள்ளியில் பெறுகிற மதிப்பெண்களைப் பொறுத்து தேர்ந்தெடுக்கப்படு கிறார்களா என்றும் அரசு உடல் ஊனமுற்ற மாணவர்கள் அனைவருக்கும் உதவி வழங்க முன்வருமா என்றும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கிட்டத்தட்ட 112 மாணவர்களுக்கு உதவி அளிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு கலைப் பிரிவில் 36 பேர்களுக்கும் பணிப்பிரிவில் (புரொபெஷனல் கோர்ஸ்) 20 பேர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. விழி இழந்தோர்களைப் பொறுத்த வரையில், கலைப் பிரிவில் 11 பேர்களுக்கும் பணிப் பிரிவில் 10 பேர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. காது கேளாதவர்களுக்கு கலைப் பிரிவில் 10 பேர்களுக்கும் பணிப்பிரிவில் 10 பேர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக பல வகைகளில் கிட்டத்தட்ட 112 பேர்களுக்கு மொத்தம் ரூ. 74,000 கொடுக்கப்படுகிறது. கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த வகையில் 86 பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.

Government High Schools (B. Wing)

* 39 *Q*—THIRU A.R. DAMODARAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to **state—**

(*a*) the number of Government High Schools (B. Wing) which had a strength of over 1,000 students as on 2nd October 1970;